Department of Education - Western Province

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education - Western Province**

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2017
**Year End Evaluation**

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 10 | විෂයය / பாடம் / Subject: தமிழ் மொழியும் இலக்கியமும் | පත්‍රය / வினாத்தாள் / Paper: II | කාලය / காலம் / Time: 02 மணித்தியாலம் |

**அவதானிக்க வேண்டியவை**
(I) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
(ii) இவ்வினாத்தாளுக்குரிய புள்ளி 80 ஆகும்

(1) சுருக்கமான விடை தருக.

1. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.
விருந்தோம்பலில் பறம்பு நாட்டுக்கிணை ஏதுமில்லை
2. பின்வரும் வாக்கியத்தைப் பொருத்தமான நிறுத்தக் குறியீடு இட்டு மீண்டும் எழுதுக.
ஏன்மேனே நீ உன்ரை மச்சாளிடம் பேசிறாயில்லையாம்
3. "ஔடதம்" என்ற சொல்லின் கருத்துப் புலப்படுமாறு வாக்கியம் அமைத்துக் காட்டுக.
4. "மறை"என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாக தனித்தனி வாக்கியங்களை எழுதுக.
5. வாக்கியத்தின் வழுவை திருத்தி எழுதுக.
நேற்று இரு மாணவர் மன்றக் கூட்டத்திற்கு வரவில்லை.
6. பின்வரும் வாக்கியத்தின் எழுவாய் பயனிலையைக் குறிப்பிடுக.
நீ வருவாய் என எதிர்பார்த்தேன்
7. புணர்த்தி எழுதுக.
1. மணி + ஓசை 2. மரம் + பலகை
8. கண்ணன் பாடசாலைக்குச் சென்றான்
கண்ணன் பாடசாலையில் நன்றாகப் படித்தான்
கண்ணன் வீடு திரும்பினான்
9. கண்ணன் மிக இனிமையாக புல்லாங்குழல் வாசித்தான்
இதனைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக
10. "ஆரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர் மேல் எழுத்துக்கு நேர்" இதில் இடம்பெறும் அணியை இனங்கண்டு விளக்குக.

(2) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

i) "இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது இளைஞர்களுக்கு கணணி பற்றிய அறிவும், ஆங்கில மொழியறிவும் இன்றியமையாதன" இது பற்றிய கருத்து வெளிப்பாடு

ii) இன்று வெகுசன தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியினால் உலகமே சுருங்கி ஒரு கிராமமாகி விட்டது. அச்சு ஊடகங்களை விட இலத்திரனியல் ஊடகங்கள் பயன்மிகுந்த நிகழ்ச்சிகளை மக்களுக்கு தருவதோடு அறிவுத் தாகத்தையும் தணிக்கிறது. என்ற கருத்தினை ஆதரிக்கும் ஒருவருக்கும் அதனை எதிர்க்கும் மற்றொருவருக்கும் இடையே இடம்பெறும் உரையாடல்

kalvi.lk
Scanned by CamScanner

iii) இன்று மாணவர் தொலைக்காட்சி பார்ப்பதிலேயே அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். வாசிப்புப் பழக்கம் அவர்களிடம் அருகி வருகின்றது. வாசிப்பு சிறந்த பொழுதுபோக்கு அறிவு விருத்திக்கும் கற்றலுக்கும் உதவுகின்றது. இக்கருத்துக்களை வலியுறுத்தி ஒரு மேடைப்பேச்சு

iv) உமாவின் மனதில் மகிழ்ச்சி கரைபுரண்டோடியது. காரணம் அன்று அவளுக்கு கிடைத்த கடிதம் தான். ஆசிரியத் தொழிலுக்கான நியமனக் கடிதமே அது. சிறுவயதிலேயே தந்தை இழந்த அவள் தனது தாயையும் தம்பியையும் தங்கையையும் நினைத்துப்பார்கிறாள். நம்பிக்கை துளர்விடுகிறது. தொடர்ந்து உமாவின் வாழ்வில் இடம்பெற்ற சம்பவங்களைச் சுவைபடக் கூறும் ஒரு கற்பனைச் சிறுகதை

**(3)** கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

பாடசாலை மதிய உணவுத்திட்டத்தின் பிரதான நோக்கம் ஒவ்வொரு மாணவருக்கும் 800 கலோரியைக் கொண்ட ஒரு வேளைப் போசாக்குணவுகள் உரிய வேளையில் கிடைக்கப்பெறாமையால் ஏற்படும் போசனைக் குறைபாடு, உடல்மெலிவு, குருதிச்சோகை, அயடின் குறைபாடு, விற்றமின் குறைபாடு போன்ற கோளாறுகள் விசேடமாகக் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளிடத்தே பரவலாகக் காணப்படுகின்றமை ஆய்வுகளின் மூலம் அறியப்பட்டுள்ளது. அவ்வாறான பிள்ளைகளின் போசனை நிலை, அவர்களது கற்றல் குறைபாட்டினால் அவதியுறும் மாணவரின் உடல் வளர்ச்சியும் விவேக வளர்ச்சியும் அறிவு வளர்ச்சியும் பின் தங்கிக் காணப்படுகின்றமை ஆய்வுகளின் மூலம் தெளிவாகியுள்ளது. மாணவரின் பசிக் கொடுமையைக் குறைப்பதற்கும் போசனை மட்டத்தை மேம்படுத்துவதற்கும் காரணமாக அமையும் மதிய உணவு வேலைத்திட்டத்தின் மூலம் அறிவு வளர்ச்சி ஏற்படும். இதனூடாக அவர்களது கவனம், நினைவாற்றல், நன்னடத்தை என்பனவும் வளர்ச்சியடையும். அத்துடன் கல்வியில் நாட்டம் ஏற்படுவதுடன் நல்ல துலங்கலையும் வெளிக்காட்டுவார்கள். இதனால் சமூகப் பொறுப்புள்ள ஆளுமை வளர்ச்சி கொண்ட மாணவர்களை உருவாக்க முடியும்.

**(4)** பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

பிறரை ஏமாற்றும் நோக்கத்துடன் நிகழ்ச்சிகளைத் திரித்துக் கூறுதலே பொய் பேசுதலாகும். இதுவும் பள்ளி மாணவர்களிடையே காணக்கூடிய ஓர் இடர்தரும் நடத்தையாகும். சிறுமிகளைக் காட்டிலும் சிறுவர்களிடையே பொய் பேசுதல் அதிக அளவில் காணப்படுகிறது. சின்னஞ்சிறு குழந்தைகளும் சில சமயங்களில் உண்மைக்குப் புறம்பானவற்றைப் பிறரிடம் கூறுவதை நாம் காண்கிறோம். ஆனால் இதனைப் பொய்பேசுதல் என்று கருதலாகாது. இவ்வயதுக் குழந்தைகளிடம் தம் கற்பனையினின்றும் எழும் கருத்துக்களை உண்மை நிகழ்ச்சிகளின்றும் பிரித்தறியும் திறன் கிடையாது. சுமார் பத்து அல்லது பன்னிரண்டு வயதுக்குள் இத்திறன் முழு வளர்ச்சியடைந்து விடுகிறது. இந்நிலையில் குழந்தைகள் தொடர்ந்து உண்மைக்கு மாறானவற்றை கூறுவார்களாயின் அவர்கள் பொய் பேசுவதாகவே கொள்ளப்படும்.

உண்மை பேசுதல் என்பது சந்தர்பங்களையும் சூழ்நிலைகளையும் பொறுத்தாகும் எனும் கருத்தைக் குழந்தைகளால் உணர்ந்து கொள்ள முடிவதில்லை. தான் பொய் பேசும் போது தன்னைக் கடிந்து கொள்ளும் தந்தை தன்னிடம் கடன் கேட்கத் தனது நண்பன் வரும் போது வீட்டினுள் ஒளிந்து கொண்டு வீட்டில் இல்லையென்று அக்குழந்தையை விட்டே கூறச் சொல்லும் போது அக்குழந்தை உண்மைக்கும் பொய்க்கும் இடையேயுள்ள பிரிக்கும் கோட்டை உணர முடியாமல் திகைக்கின்றது. பள்ளி மாணக்கர் பொய் பேசுவது பல காரணங்களின்றும் எழக்கூடும் தண்டனைகளினின்றும் தப்புவதற்காகவும் தமது நண்பர்களை ஆசிரியர்களது சினத்தினின்றும் காப்பதற்காகவும் தமது பெருமையை தமது நண்பர்களிடையே நிலைநாட்டுவதற்காகவும் பிறரது கவனத்தைத் தம்மால் கவருவதற்காகவும் பள்ளிக்



www.Paritchai.com

kalvi.lk

Scanned by CamScanner

குழந்தைகள் பொய் பேசக்கூடும். மேலும் பொய் பேசுதல் தாழ்வுணர்ச்சியின்றும் எழலாம். கட்டிளமைப்பருவத்தினர் தம் குழு உறுப்பினர்களின் நலனைக்காக்க பல பொய்களைச் சொல்லக்கூடும் காரணமின்றி எடுத்ததற்கெல்லாம் பொய் பேசுதல் மனவெழுச்சிப் போராட்டங்களின்றும் எழும் அசாதாரண நடத்தையாகும்.

1) பொய் பேசுதல் என்றால் என்ன?
2) சின்னஞ்சிறு குழந்தைகள் உண்மைக்கு புறம்பான விடயத்தைக் கூறினும் பொய்பேசுதல் என்று கூறமுடியாது ஏன்?
3) பள்ளி மாணவர்கள் பொய் பேசுவதற்கான காரணங்கள் எவை?
4) இப்பந்தியில் அசாதாரண நடத்தை என எதனை குறிப்பிடப்படுகின்றது?
5) குழந்தைக்கும் பெற்றோருக்கும் இடையேயுள்ள பிரிக்கும் கோட்டை நிவர்த்தி செய்ய முடியுமா? எப்படி?

(5) அகில இலங்கைத் தமிழ் மொழித்தின விழாவில் இடம்பெற்ற பேச்சுப் போட்டியில் முதலாம் இடம் பெற்றதற்கான மகிழ்ச்சியை உமது நண்பருடன் பகிர்ந்து கொள்ள விரும்பும் நீர், உமது வெற்றிக்கு உதவியவர்கள் பற்றியும் பேச்சுப் போட்டிக்கு உம்மை எவ்வாறு தயார்படுத்திக் கொண்டீர் என்பது பற்றியும் 100 சொற்களில் கடிதம் எழுதுக.

**அல்லது**

பாடசாலை மாணவர் மன்றச் செயலாளர் என உம்மைக் கருதி, உமது பாடசாலை நூலகத்தை மன்றத்தினால் சீர்மைக்க விரும்புகிறீர், அது பற்றி பாடசாலை அதிபருக்கு ஓர் அறிக்கை.

kalvi.lk
Scanned by CamScanner

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page